இருப்பின், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய கருத்துரு பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, உரிய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 386/மேய்க்கால் புறம்போக்கு நிலம் 145 ஏக்கர் அளவில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்தமைக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

அரசு விழா

***34489—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னர் திருமலை நாயக்கர் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2013 அக்டோபர் 25]

மாமன்னர் திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழாவை, அரசு விழாவாக அறிவிக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை, அறிவுடைமை, ஆற்றலுடைமை, இறையாண்மை, துணிவுடைமை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் உரிமைக்குக் குரல் கொடுக்கின்ற அன்னையாய், நேற்று வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து, இன்று கோரிக்கை வைக்கின்ற இடத்திலேயும், நாளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுகிற இடத்திலேயும் அமர இருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகிகளை, தீரர்களை, தலைவர்களை, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை மதிக்கின்ற மாண்பைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து தென் பகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்ட சான்றோர்களையும், தமிழ் மண்ணிற்குப் பெருமைச் சேர்த்த பெரியோர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் நினைவுகூர்ந்து, பெருமைப்படுத்துவதில் பல படிகள் முன்னே நிற்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய பெரியோர்களின் பிறந்த நாள் விழாக்களை நடத்துவதன்மூலம், அவர்கள் ஆற்றிய தியாகத் தொண்டுகளை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள நல்வாய்ப்பாக

அமையும் என்று கூறி, விழாக்களைச் சிறப்பாக நடத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி, ஆண்டுதோறும் சென்னையில் 27 விழாக்களையும், மாவட்டங்களில் 20 விழாக்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட ஆணையிட்டு, ஜூலை 7 ஆம் தேதி, அவரது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் பிறந்த நாள் விழாவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுக்கிணங்க கொண்டாடப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. எனவே, தமிழ் மண் வாழவும், தமிழ் மக்கள் வாழ்வு உயரவும் பாடுபட்ட பெரியோர்களது புகழ் நிலைக்கும் வகையில், அவர்களைப் பெருமைப்படுத்துவதே தமது தலையாய கடமையாகக் கொண்டு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே பாரம்பரியமிக்க பிராமணர் குடும்பத்திலே பிறந்து, இலண்டனில் சட்டம் பயின்று,

2013 அக்டோபர் 25]

சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, புகழ் பெற்ற வழக்கறிஞர் தொழிலையும் விட்டு, சிறை சென்ற சுப்ரமணிய சாஸ்திரியார் அவர்கள் பிறந்த ஊர் ஆரணி. அங்கு அவருடைய பெயரிலே அரசு உதவி பெறக்கூடிய சுப்ரமணிய சாஸ்திரியார் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. எனவே, அவருடைய நினைவைப் போற்றுகின்றவகையிலே, ஆரணியில், சுப்ரமணிய சாஸ்திரியார் அவர்களுக்கு ஒரு மணிமண்டபம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவின் ஊற்றாம் அம்மா அவர்கள், தனது சிந்தையில் உதித்த விந்தைமிகு திட்டங்களால், விரைந்த செயல்திறத்தால் தமிழகத்தை முன்னெடுத்துச் செல்லும் தங்கமனத் தலைவி; புகழ்கொண்ட பெரியோர்களுக்கும், போற்றுதலுக்குரிய பெருமக்களுக்கும் ஏற்றதொரு நல்மதிப்பை, இசைவான கௌரவத்தை உவப்புடனே அளிக்கின்ற உத்தமப் பெண்ணரசி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாட்டின் மேன்மைக்கென தன்னலமற்ற சேவையாற்றிய தலைவர்கள், தமிழுக்குத் தொண்டு செய்த சான்றோர்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று தம்மையே நாட்டுக்காக அர்ப்பணித்த தியாகசீலர்கள் ஆகியோரின் நினைவைப் போற்றி, அவர்தம் புகழ் என்றென்றும் விளங்கவும், அவர்களது பெருமையை உணர்த்தும் வகையிலும் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் சிதம்பரநாதன் அவர்களுக்கும், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளியில் கீழப்பழூர் சின்னசாமி அவர்களுக்கும் திருவுருவச் சிலை அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2013 அக்டோபர் 25

முற்பகல் 11–35

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம் சங்ககிரியில் தீரன் சின்னமலை அவர்களுக்கும், விருதுநகரில் தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கும், சிவகங்கையில் வேலுநாச்சியார் அவர்களுக்கும், சென்னை இராயபுரத்தில் சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் அவர்களுக்கும் மணிமண்டபங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும், திருவாரூரில் மனுநீதி சோழனுக்கு நினைவு மண்டபம் அமைக்கவும், சிவகங்கையில் வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் அமைக்கவும், திண்டுக்கல்லில் ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபம் அமைக்கவும், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சீரிய பணிகளைச் சிறப்புடன் ஆற்றி, பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

மின்னணு ஆளுமை

***7768—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்னணு ஆளுமையின்கீழ் மனுக்களின் நிலையை அறிந்துகொள்ளும் வசதியை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?